Series : 2LKNM

SET ~ 4

வினாத்தாள் குறியீடு எண் **10**
Q.P. Code

வரிசை எண்.
Roll No.

மாணவர்கள் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

குறிப்பு / **NOTE :**

(I) இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **11** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.

Please check that this question paper contains **11** printed pages.

(II) வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.

Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.

(III) இந்த வினாத்தாளில் **14** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.

Please check that this question paper contains **14** questions.

(IV) எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.

**Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.**

(V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period. {}

# தமிழ்
# TAMIL

*கால அளவு : **3** மணி*
*Time allowed : **3** hours*

*மொ.மதிப்பெண்கள் : **80***
*Maximum Marks : **80***

***General Instructions :***

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   இவ்வினாத்தாள் 14 கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   பகுதி அ – *2* வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் *1* முதல் *2* வரை]

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   பகுதி ஆ – *4* வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் *3* முதல் **6** வரை]

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   பகுதி இ – *4* வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் *7* முதல் *10* வரை]

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   பகுதி ஈ – *1* வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் *11*]

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   பகுதி உ – *3* வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **12** முதல் *14* வரை]

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

## SECTION – A [Reading] 10 Marks

### பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

ஆழமான நீர் நிலை மடு எனப்படும் . அச்சொல்லைக் கொண்ட ஊர்ப் பெயர்கள் பல தமிழகத்தில் உண்டு. நெல்லை நாட்டுக் கல் மடுவும் தஞ்சை நாட்டு முதலை மடுவும் தென் ஆற்காட்டு ஆனைமடுவும் சேலம் நாட்டுச் செம்மடுவும் இத்தகையனவாகும். இலஞ்சி என்னும் ஏரியைக் குறிக்கும். செல்வச் செழுமையால் பொன்னிலஞ்சி என்று புகழ்ந்து உரைக்கப்பட்டது அவ்வூர்.

இயற்கையில் அமைந்த நீர்நிலை பொய்கை எனப்படும். பொய்கையார் என்பது ஒரு பழந்தமிழ்ப் புலவரின் பெயர். அவர் பொய்கை என்னும் ஊரில் பிறந்தவர் என்பர். உண்பதற்குரிய தண்ணீர் நிறைந்த குளம் ஊருணி எனப்படும். ஊரார் உண்ணும் நீர் உடையதாதலால் ஊருணி என்னும் பெயர் அதற்கு அமைந்ததென்பர். ஊருணியின் பெயரால் வழங்கப்பெறும் ஊர்கள் தமிழ்நாட்டில் பல உண்டு. பேரூரணி என்ற ஊர் நெல்லை நாட்டிலுள்ளது. மயிலூரணி இராமநாதபுரத்தில் காணப்படும்.

இன்னும், ஊற்று நீரால் நிறையும் கேணியும் கிணறும் சில ஊர்களைத் தோற்றுவித்துள்ளன. சென்னை மாநகரிலுள்ள திருவல்லிக்கேணியும் நெல்லை நாட்டிலுள்ள நாரைக் கிணறும் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

வினாக்கள்:

(i) இயற்கையில் அமைந்த நீர்நிலையின் பெயர் யாது ?

(A) இலஞ்சி (B) பொய்கை
(C) ஊருணி (D) பேரூரணி

(ii) உண்பதற்குரிய நீர் நிறைந்த குளத்தின் பெயரில் அமைந்த ஊர் ?

(A) ஆனைமடு (B) பொன்னிலஞ்சி
(C) ஊருணி (D) கண்மாய்

(iii) நீர் நிலையின் பெயர் கொண்ட பழந்தமிழ்ப் புலவர் யார் ?

(A) முதலாழ்வார் (B) நம்மாழ்வார்
(C) பொய்கையார் (D) பேயாழ்வார்

(iv) தமிழ்நாட்டின் தலைநகரில் நீர்நிலையின் பெயர் கொண்ட பகுதியாக விளங்குவது எது ?

(A) திருவல்லிக்கேணி (B) நாரைக்கிணறு

(C) பெரம்பூர் (D) எழும்பூர்

(v) அதிக ஆழமான நீர் நிலை எவ்வாறு அழைக்கப்படும் ?

(A) ஆனை மடு (B) மடு

(C) பள்ளம் (D) இலஞ்சி

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

கருதியதை முடிப்பதற்குரிய வழி வகைகளைக் காட்டுவதில் வல்லவர் திருவள்ளுவர். அறம் பற்றிய பல்வேறு வகையான கருத்துகள் இவ்வுலகில் உண்டு. "அறம் செய்க" என்று ஆணையிடுவது பிறமொழிகளின் மரபு. அறம் செய விரும்பு என்பது தமிழ் மொழியின் மரபு. மனம், மெய், மொழி இவற்றின் துணைகொண்டு அறம் செய்ய வேண்டும். இவற்றுள் மொழியால், மெய்யால் செய்யக்கூடிய அறங்களின் பொய்மையும் வஞ்சனையும் இருக்கக்கூடும். ஆனால் மனத்தால் எண்ணிச் செய்யக் கூடிய அறங்களில் மேற்கூறியவற்றிற்கு இடம் இல்லை. அதனால் தான் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்றகிறார் வள்ளுவர். செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். ஆகவே நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மாசின்றி வைத்துக் கொள்வது சிறந்தது. மனத்தூய்மை இன்றிச் செய்யப்பெறும் அறங்கள் செய்பவர்க்கும் செய்யப்பெறுவோர்க்கும் பயன் தராது. மனத்தூய்மை வாழ்க்கை முழுவதுமே சாதித்துத் தரக்கூடியது. அதை முயன்று பெறுவதே அறம். மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மை உடையன. இதனையே திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" என்று கூறுகிறார்.

**வினாக்கள்:**

(i) அறம் பற்றிய தமிழ்மொழியின் மரபு யாது ?

(ii) மொழி, மெய்யால் செய்யக்கூடிய அறங்களின் தன்மை யாது ?

(iii) சிந்தனையின் நிலைக்களனாகக் கருதப்படுவது எது ?

(iv) வாழ்க்கையில் சாதிக்க எது தேவை ?

(v) செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது எது ?

## SECTION – B [Grammar] 12 Marks

## பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) இசை நிறையளபெடை

(A) உறாஅர் (B) வரனசைஇ

(C) உண்பதூஉம் (D) கொடுப்பதூஉம்

(ii) அன்மொழித்தொகை

(A) பெரிய மீசை வந்தார்

(B) மலர்க்கை

(C) செங்காந்தள்

(D) தேர்ப்பாகன்

(iii) பெயரெச்சத்தொடர்

(A) நண்பா எழுது (B) கேட்ட பாடல்

(C) காற்று வீசியது (D) பாடினாள் கண்ணகி

(iv) திணைவழாநிலை

(A) செழியன் வந்தது (B) செழியன் வந்தாள்

(C) செழியன் வந்தான் (D) செழியன் வந்தன

(v) முல்லை நிலத்திற்குரிய விலங்குகள்

(A) புலி, கரடி (B) முதலை, சுறா

(C) எருமை, நீர் நாய் (D) முயல், மான்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) **3 × 1 = 3**

(i) சுரமும் சுரம் சார்ந்த இடமும் ________

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) பாலை

(ii) பொருள்கோள் ______ வகைப்படும்

(A) பதினாறு (B) எட்டு

(C) பத்து (D) ஏழு

(iii) 'வைகறை' என்பது ______நிலத்தின் சிறு பொழுதாகும்.

(A) நெய்தல் நிலம் (B) முல்லை நிலம்

(C) குறிஞ்சி நிலம் (D) மருத நிலம்

(iv) விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் ________தொழிற்பெயராகும்.

(A) விகுதி பெற்ற (B) முதனிலைத்

(C) எதிர்மறை (D) முதனிலைத் திரிந்த

(v) 'திருவள்ளுவமாலை' கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது _______ வினா.

(A) கொடை வினா (B) கொளல் வினா

(C) அறி வினா (D) அறியா வினா

5. இலக்கணக் குறிப்பு தருக : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) பிஞ்சு விரல்

(A) உவமைத் தொகை (B) உம்மைத் தொகை

(C) வினைத்தொகை (D) உருவகம்

(ii) கேள்வியினான்

(A) தொழிற்பெயர்

(B) வினைமுற்று

(C) வினையாலணையும் பெயர்

(D) பெயரெச்சத் தொடர்

(iii) உறுபுகழ்

(A) விளித்தொடர் (B) உரிச்சொல் தொடர்

(C) பெயரெச்சத் தொடர் (D) வினையெச்சத்தொடர்

(iv) பசுவின் குட்டி

(A) மரபு வழு (B) திணை வழு

(C) இட வழு (D) கால வழு

(v) தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்

(A) குறிஞ்சி நிலத்தொழில் (B) முல்லை நிலத்தொழில்

(C) மருத நிலத் தொழில் (D) நெய்தல் நிலத் தொழில்

6. கூறியவாறு செய்க : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) $3 \times 1 = 3$

(i) விலஃஃகி – எவ்வகை அளபெடை எனக்கூறுக.

(A) செய்யுளிசை அளபெடை (B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(ii) கனிவாய் – உவமேயத்தைக் கூறு.

(A) கனி (B) வாய்

(C) கனி போன்ற வாய் (D) வாய் போன்ற கனி

(iii) தலை வணங்கினான் – வேற்றுமை வகையைக் கூறு.

(A) இரண்டாம் வேற்றுமைத்தொகை

(B) மூன்றாம் வேற்றுமைத்தொகை

(C) நான்காம் வேற்றுமைத் தொகை

(D) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

(iv) இது செய்வாயா? – வினா எதிர் வினாதல் விடையாக மாற்றுக.

(A) செய்வேன் (B) செய்ய மாட்டேன்

(C) செய்யாமலிருப்பேனா? (D) நீயே செய்

(v) நெய்தல்– சிறு பொழுதினைக் கூறுக.

(A) எற்பாடு (B) வைகறை

(C) மாலை (D) யாமம்

## SECTION – C (Main Course Book) 31 Marks

## பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. **3 × 1 = 3**

(i) பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் ______ விடல்.

(A) நட்பு (B) தொடர்கை

(C) தொடர்பை (D) பிரிவை

(ii) நாள்தொறும் நாடி முறைசெய்யா ______

நாள்தொறும் நாடு கெடும்.

(A) வேந்தன் (B) மன்னவன்

(C) அரசன் (D) மக்கள்

(iii) இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் ______

உள்ளுள் உவப்ப துடைத்து.

(A) மகிழ்ந்துள்ளம் (B) மகிழ்உள்ளம்

(C) மகிழ்துள்ளம் (D) மகிழ்த்துள்ளம்

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்

மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்

அணை கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு

இணை கிடந்த தேதமிழ் ஈண்டு"

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

(A) இரட்டுற மொழிதல் (B) தனிப்பாடல் திரட்டு

(C) தேன் சிட்டு (D) திருக்குறள்

(ii) தமிழ் எவற்றை அணிகலன்களாகப் பெற்றது?

(A) ஐம்பெருங்காப்பியங்கள் (B) ஐஞ்சிறு காப்பியங்கள்

(C) பத்துப்பாட்டு (D) எட்டுத்தொகை

(iii) தமிழழகனாரின் இயற்பெயர் என்ன?

(A) சோமசுந்தரம் (B) சுந்தரர்

(C) சண்முகசுந்தரம் (D) சண்முகப்பிரியன்

(iv) மேவலால் – பொருள் தருக.

(A) கிடைப்பதால் (B) பொருந்துதலால்

(C) பொருந்தாதலால் (D) கிடைக்கப்பெறுதலால்

(v) இப்பாடல் கடலை எதனோடு ஒப்பிடுகிறது?

(A) முத்துக்களோடு (B) மக்களோடு

(C) தமிழோடு (D) தமிழ்சங்கத்தோடு

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. **2 × 4 = 8**

(i) பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.

(ii) முதுபெண்டிர் விரிச்சி கேட்ட நிகழ்வை விளக்கி எழுக.

(iii) மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தது ஏன் என்பதை விளக்கி எழுதுக.

(iv) கோசல நாட்டில் எவை எவை இல்லை என்பதை கம்பர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 5 = 15**

(i) பாவாணர் குறித்தும் அவர் விளக்கிய சொல் வளம் குறித்தும் எழுதுக.

(ii) மொழிபெயர்ப்பில் அதிக கவனம் தேவை என்பதை உரிய நிகழ்வோடு விளக்கி எழுதுக.

(iii) இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புகளால் மனிதன் அடையும் பயன்களையும் சிக்கல்களையும் தொகுத்து வரைக.

(iv) வாழை இலை விருந்தின் வழிமுறைகளை வரிசையாகத் தொகுத்து எழுதுக.

(v) ‘வளி’ இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

**SECTION – D (Non-Detail) 10 Marks**

**பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்**

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 10 = 10**

(i) உரைநடையின் அணி நலன்கள்


(ii) புதிய நம்பிக்கை

(iii) புயலிலே ஒரு தோணி

**SECTION – E (Creative Writing) 17 Marks**

**பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்**

12. (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **1 × 3 = 3**



**For Visually Impaired Candidates**

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) இக்கரைக்கு அக்கரை பச்சை.

(ii) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. **1 × 8 = 8**

(i) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உன் தம்பிக்கு முக்கிய சாலை விதிகளை விளக்கியும் கடைபிடிக்க வலியுறுத்தியும் கடிதம் ஒன்று வரைக.

*(அல்லது)*

(ii) மருந்தகம் ஒன்றிலிருந்து வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீர் அம்மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதரத்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று வரைக.

(எக்கடிதமாயினும் நும் முகவரி செ. மாறன் / செ. மாலா, எண். 36, செந்தில் நகர், திருச்சி – 600 202.

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – விசும்பின்துளி ‾ வான்

சிறப்பு – மரம் வளர்ப்போம் ‾ இயற்கையைப் போற்றுவோம்

முடிவுரை

(ii) முன்னுரை – மானுட மேன்மைக்கான வழிகள் –

செயலைத் திட்டமிடு – திட்டத்தைச் செயல்படுத்துதல் ‾ வானம் வசப்படும் ‾ முடிவுரை

(iii) முன்னுரை – முன்தோன்றி மூத்த தமிழ் -

இலக்கிய வளம் – இலக்கணச் சிறப்பு

அறிவியல் தமிழ் இணையத் தமிழ் – பழமையும் புதுமையும் – முடிவுரை